# வருடாந்த அறிக்கை

# 2015

# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

**விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**

# உள்ளடக்க அட்டவணை


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | அறிமுகம் | 02 |
| 02. | தரம் சம்பந்தமான கொள்கை | 03 |
| 03. | இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம், தொலைநோக்கு, இலக்கு, குறிக்கோள் மற்றும் முக்கிய விடயங்கள் | 04 |
| 04. | செயற்பாடுகளும் நுட்பங்களும் | 05 |
| 05. | தலைவரின் செய்தி | 07 |
| 06. | பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு | 10 |
| 07. | ஆளுநர் சபை | 15 |
| 08. | ஸ்தாபகக் கட்டமைப்பு | 16 |
| 09. | முகாமைத்துவம், குழுக்கள், SLAB ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர் குழு | 17 |
| 10. | நடவடிக்கைகள் | 20 |
| 11. | 2015 இல் முக்கிய செயற்பாடுகள் | 24 |
| 12. | நிதித்துறை முக்கிய அம்சங்கள் - 2015 | 26 |
| 13. | நிதிசார் அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் | 32 |
| 14. | கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் | 45 |
| 15. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான தலைவரின் கருத்துக்கள் | 55 |
| 16. | இலங்கை தராதர அங்கீகார சபையின் இலச்சினை | 61 |
| 17. | தராதர அங்கீகாரக் குழுக்கள் - இணைப்பு I | 62 |
| 18. | ஸ்தாபக அமைப்பு - செயற்பாடு | 68 |
| 19 | தராதர அங்கீகாரம் பெற்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2015 | 69 |

## அறிமுகம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தரராதர அங்கீகார சபை (SLAB), இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கான 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனமாகும். SLAB, 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழும் பின்னர் விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழும் செயற்பட்டு வந்தது.

இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கான அதியுயர் ஸ்தாபனமாக SLAB நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பலதரப்பட்ட முயற்சிகளை எடுத்துள்ளது. NQI ஆனது, பரிசோதனை, கண்காணிப்பு மற்றும் சான்றிதழ் வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் போதும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் போது பொருட்கள் சேவைகள் வழங்குகைகளின் போதும் எழும் தீர்வையற்ற தடைகளை நீக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பரிசோதனை மற்றும் அளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வுகூடங்கள், கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு (CABs) தரம் தொடர்பான பிரச்சினைகளின் போது இணக்கமான முறையில் தராதர அங்கீகார சேவைகளை வழங்குவதற்கு NQI இன் பூரணத்துவம் பங்களிப்புச் செய்கின்றது. தரக்கட்டுப்பாடு, அளவைகள் மற்றும் சட்டங்களை நிர்வகிக்கிக்கும் தேசிய தர உட்கட்டமைப்பின் ஏனைய முக்கிய அம்சங்களைப் பலப்படுத்தும் பொறுப்பையும் SLAB கொண்டுள்ளது.

தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) சம்பந்தப்பட்ட மட்டில், பொதுமக்கள் சுகாதாரம், தொழில் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, நீதியான வர்த்தகம் போன்ற சிறந்த வர்த்தக ரீதியிலான வழிமுறைகளை நிலைநாட்டுவதற்கான தேசியப் பொறுப்பை, ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் கொண்டுள்ளன. பங்குதாரர்களின் கேள்வியின் பேரில் தராதர அங்கீகார சேவைகள் சுயமாக வழங்கப்படுவதனால், சட்டதிட்டங்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணிக்கவும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் தேசிய பொறுப்பைக் கொண்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சிறந்த வழிமுறைகள் நல்ல பலனைத் தரவேண்டுமானால், உற்பத்தியாளர்களும் சேவை வழங்குநர்களும், சம்பந்தப்பட்ட தரங்களையும், ஒத்தியல்பு மதிப்பீடுகளையும், பொருட்கள் சேவைகள் வழங்கப்படும் சமயத்தில் தீவிரமாகக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இந்தவித மூன்றாம் தரப்பு உறுதியளித்தல் என்பது, தகுந்த தேசிய மற்றும் சர்வதேச நியமங்கள் அடிப்படையில் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தராதர அங்கீகாரம் வழங்கப்பட்ட இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும், பக்கச்சார்பின்மை, தகைமை, நேர்மை, ஒத்தியல்பு மதிப்பீட்டின் நம்பகத்தன்மை போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டின் பிரதான கொள்கைகளை உறுதி செய்கின்றன. இத்தகைய மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு வழிமுறைகளுக்கு அமைய, சுதந்திரமான, தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர்களினால் நடத்தப்படுகின்றன. ஒத்தியல்பு மதிப்பீடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் போது, அவை அனைத்தும் சர்வதேச

ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதர அங்கீகாரக் கொள்கைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம், பொருட்களுக்கும், சேவைகளுக்கும் போதியளவு சந்தை வாய்ப்புக்களும், நீதியின் அடிப்படையிலான போட்டியும் உருவாக்கப்படுகின்றது. இறுதியாக, வாடிக்கையாளர் மற்றும் பங்காளிகள் மத்தியில் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

இலங்கை தராதர அங்கீகார சபை, இல.546/4, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதன் தொடர்பாடல் விபரங்கள் வருமாறு:

தொலைபேசி - 0112 372 638/9, பணிப்பாளர் - 0112 372 680
தொலைநகல் - 0112 372 629,
மின்னஞ்சல் - slabmail@slab.lk, director@slab.lk

இணையத்தளம் - www.slab.lk

## தரம் சம்பந்தமான கொள்கை

SLAB என்பது, உயர்மட்ட நேர்மை, திறமை, பயன்பாடு என்பனவற்றின் உச்சக்கட்ட நிலையில் தராதர அங்கீகாரத்தை வழங்குவதில் அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவை வழங்கும் ஸ்தாபனமாகும்.

வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள், வர்த்தகத் துறையினர் ஆகியோரின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேசமயத்தில், சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குவதில் SLAB அர்ப்பணித்துப் பணிபுரிகிறது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்யவென, சர்வதேச நிறுவனங்களின் கடமைகளில் திறமையாகவும், செயல்திறன் மிக்கதாகவும் பங்கேற்பதற்கு SLAB தயாராகவுள்ளது.

SLAB யின் நடவடிக்கைகளில் உச்சக்கட்ட தொழில்திறனுடனான பங்களிப்பை வழங்கவென, சேவையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் அவர்களது தகைமைகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கான சூழலை SLAB வழங்கும்.

ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் செயற்பாடுகளையும், தேவைகளையும் சூழல் கோரிக்கைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதோடு, இவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்தவென பொருத்தமான மாற்றங்களை SLAB பூர்த்தி செய்யும்.

## இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான, தராதர அங்கீகார சபை இல.32 இன் கீழ் உருவாக்கப்பட்டது. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் இந்தச் சபை SLAB சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) அங்கத்தவர்களைக் கொண்ட மன்றத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. இதன் பணிப்பாளர், சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் (CEO) ஆளும் மன்றத்தின் செயலாளருமாவர்.

## தொலைநோக்கு

"தேசிய பொருளாதாரத்துக்கும், சமூக நலனுக்கும், அதன் பங்களிப்பை வழங்கும், உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதும், சக்திவாய்ந்ததும், புத்தம் பதியதுமான தராதர அங்கீகார அமைப்பாகச் செயற்படல்".

## இலக்கு

"உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கென பொருட்களுக்கும், சேவைகளுக்குமான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கென, சர்வதேச அங்கீகாரம் கொண்ட தராதர அங்கீகார சேவைகளுக்கு ஊக்கமளித்து அவற்றை வழங்குதல்".

## பெறுமானங்கள்

1. நேர்மையுடனும் உச்சக்கட்ட நீதியின் வழிகாட்டலுடனும் சேவையாற்றுதல்.
2. சகல விடயங்களையும் தொடர்ச்சியாக அறிந்து கொள்ளல்.
3. பங்குதாரர்களின் தேவைகளை நம்பகமான முறையில் வழங்கவென. குழு அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
4. சுயாதீனமாகவும், பக்கச் சார்பற்ற முறையிலும் செயற்படுதல்.

## முக்கிய சக்திவாய்ந்த விடயங்களும் (KTA) பிரதான செயற்பாட்டுச் சுட்டிகளும் (KPI)

- KTA 1 - தராதர அங்கீகாரக் கொள்கை பற்றி விழிப்புணர்ச்சியூட்டல்
  KPI 1 - SLAB யின் 80% க்கும் மேலான தராதர அங்கீகாரம் பற்றிய வாடிக்கையாளர்களின் அறிவுணர்ச்சி
- KTA 2 - மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உருவாக்கல்
  KPI 2 - வாடிக்கையாளர் எண்ணிக்கை 20% ஆல் அதிகரிப்பு
- KTA 3 - தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குதல்
  KPI 3 - தராதர அங்கீகாரங்கள் 20% ஆல் அதிகரிப்பு

- KTA 4 - சிறந்த நிர்வாகம்
  KPI 4 - SLAB தர முகாமைத்துவ வழிமுறைகளை 100% வரை தரமுயர்த்தல்

- KTA 5 - சர்வதேச அங்கீகாரம்
  KPI 5 - SLAB தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தைத் தொடர்ந்து பேணுதல்

- KTA 6 - மனித சக்தி வளத்தைக் கட்டியெழுப்புதல்
  KPI 6 - சகல துறைகளிலும் தகைமையை 25% ஆல் அதிகரித்தல்

- KTA 7 - நிதித்துறை நிலைபேறான தன்மை
  KPI 7 - 75% சுய பூர்த்தியை அடைதல்

## செயற்பாடுகளும் நுட்பங்களும்

முக்கிய சக்திவாய்ந்த விடயங்களையும் (KTA), பிரதான செயற்பாட்டுச் சுட்டிகளையும் (KPI) அடையவென, கீழ்க்காணும் கடமைகளையும், வழிமுறைகளையும் மேற்கொள்ளும்படி சட்டத்திற்கு உட்பட்ட வகையில் SLAB யிடம் கேட்கப்பட்டுள்ளது.

- சர்வதேச மற்றும் தேசியத் தரங்களுக்கு ஏற்ற வகையில், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் (CABs) அதராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்தல்

  - ஆய்வு கூடங்களின் பரிசோதனை (ISO/IEC 17025)
  - ஆளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வுகூடங்கள் (ISO/IEC 17025)
  - மருத்துவ ஆய்வுகூடங்கள் (ISO 15189)
  - ஒழுங்குமுறைகளுக்கான சான்றிதழ் அளிக்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17021)
  - உற்பத்திப் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17065)
  - ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புகள் (ISO/IEC 17024)
  - பச்சைவீட்டு வாயுக்களைச் (GHG) செல்லுபடியாக்குதலுக்கும், சரிபார்த்தலுக்குமான அமைப்புகள் (ISO 14065)
  - கண்காணிப்பு அமைப்புகள் (ISO/IEC 17020)
  - தகைமை மதிப்பீட்டுத் திட்டங்கள் (ISO/IEC 17043)
  - சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் (GLP)

- தேசியத் தரக் கொள்கைகளில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளுக்கு ஏற்ற வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

- சம்பந்தப்பட்ட பங்காளித்துவ அமைப்புக்களுக்கென மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்களையும், விழிப்புணர்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துதல்.

- ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.

- தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து பரவலாக்குவதன் மூலம் ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும் தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.

- தராதர அங்கீகாரத்திற்கென தேசிய வழிமுறை அபிவிருத்தி செய்யப்படுவதற்கு உதவுதல்.

- இதுபோன்ற வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடைநிறுத்தல், மீளப் பெறுதல் என்பனவற்றிற்கென ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், நடத்துதல்.

## தலைவரின் செய்தி

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், இலங்கை உற்பத்திப் பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் தரத்தை உறுதிப்படுத்தவென, தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், இணக்கத்தை ஏற்படுத்தவுமென உருவாக்கப்பட்டது. SLAB தேசிய தர உட்கட்டமைப்பிற்கென (NQI) உருவாக்கப்பட்ட தேசிய தராதர அங்கீகார சபையாகும். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் SLAB தொடர்ந்து மேற்கொண்டு வருவதோடு, 2015 ஆம் ஆண்டில் புதிய திட்டங்களையும் அறிமுகம் செய்துள்ளது. இத்தகைய சகல நடவடிக்கைகளும் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பேருதவியாக அமைந்துள்ளன. எமது ஏற்றுமதிகளுக்கு தீர்வையற்ற தொழில்நுட்ப எல்லையைக் குறைப்பதன் மூலம் வர்த்தகத்திற்கும் இது பேருதவி புரிந்துள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனம் என்ற வகையில், பொருளாதார அபிவிருத்தி மற்றும் பவனையாளர் பாதுகாப்பிற்கான உறுதிப்பாடு என்பன சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் SLAB தொடர்ந்து முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கென, திட்டமிடப்பட்ட சகல இலக்குகளும் ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். 2015 ஆம் ஆண்டில் 10 வருட கால நடவடிக்கைகளை SLAB பூர்த்தி செய்துள்ளது. ஒத்தியல்பு மதிப்பீட்டின் அடிப்படை அம்சங்கள் பலப்படுத்தப்பட்டு, இலக்கின் நோக்கத்தை அடைவதில் இடராகவுள்ள சவால்கள், தடைகள் என்பனவற்றிற்குத் தீர்வு காண்பதன் அடிப்படையில் SLAB அதன் முன்னோக்கிய பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பதில் நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தராதர அங்கீகாரம் என்பது, சுய அடிப்படையிலான நடவடிக்கையாகும். தராதர அங்கீகாரத்திற்கென மேலும் பல நிறுவனங்களை இணைத்துக் கொள்வதற்கென பங்குதாரர்கள் மத்தியில் இந்த அம்சத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதனை இலக்காகக் கொண்டு, பல்வேறு விழிப்புணர்ச்சித் திட்டங்களும், கருத்தரங்குகளும் பலதரப்பட்ட தலைப்புக்களின் கீழ் நடத்தப்பட்டன. தராதர அங்கீகாரத்திற்கென இந்த வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து, குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இந்த நடவடிக்கையில் அவதானிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமானால், தராதர அங்கீகாரத்தைப் பெறவென சட்ட நடவடிக்கையாளர்கள் தொடர்ந்து தமது செல்வாக்கைப் பிரயோகிப்பது அவசியமாகும். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களை நடைமுறைக்கிடும் நிறுவனங்களின் தலைவர்கள் பலரை SLAB அதிகாரிகள் சந்தித்துள்ளனர். சட்டங்கள் நடைமுறைக்கிடப்படும் போது, தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் சமயத்தில் தராதர அங்கீகார சான்றிதழ்களின் முக்கியத்துவத்தை வற்புறுத்தித் தெரிவிப்பது இந்தக் கூட்டங்களின் நோக்கமாகும். தராதர அங்கீகாரத்திற்கென மேலதிக மதிப்பீட்டு நிறுவனங்களை இணைப்பதில் சட்ட நடவடிக்கையாளர்களின் உந்து சக்தி மிகவும் அவசியமாகும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றேன்.

SLAB கீழ்க்குறிப்பிடப்படும் நிறுவனங்களின் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. ஆசிய பசிபிக் லெபுரேட்டறி அக்ரடிட்டேஸன் கோப்பரேன் (APLAC) யின் பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் மற்றும் சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்தின் (ILAC) பரிசோதனை, மருத்துவப் பரிசோதனை, தரப்படுத்தல் ஒப்பந்தம் என்பனவே அவையாகும். 2015 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தை APLAC, MRA யின் பரிசோதனைக்கென சமர்ப்பிபதற்கான மதிப்பீடு APLAC குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்தின் மற்றும் சர்வதேச தராதர அங்கீகார மன்றத்தின் பல்தேசிய அங்கீகார ஒழுங்கமைப்பில் 2015 ஆம் ஆண்டில் கையொப்பமிட்டுள்ளது. ISO 9001 (QMS), ISO 14001 (EMS), ISO 22000 (FSMS) மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் தராதர அங்கீகாரத்திற்கெனவே SLAB இவற்றில் கைச்சாத்திட்டுள்ளது. PAC MLA யின் பசுமை வாயு மதிப்பீடு மற்றும் பரிசோதனை அமைப்புக்களின் சான்றிதழ்களைப் பெறுவதற்கென SLAB விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இத்தகைய சர்வதேச மற்றும் பிராந்திய அங்கீகாரம் கைத்தொழில் துறையினர் அவற்றின் உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் சர்வதேச சந்தையில் மேம்படச் செய்வதற்கும் பரஸ்பர அடிப்படையில் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் அவசியமாகும். மேற்குறிப்பிட்ட சர்வதேச / பிராந்திய அமைப்புக்களின் சம்பந்தப்பட்ட சர்வதேச தரங்களினதும், சட்டங்களினதும், வழிகாட்டி நெறிகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யவென, SLAB தர முகாமைத்துவ வழிமுறை பேணப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவது அவசியமாகும். 2015 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட தரங்கள், சட்டங்கள், பிரமாணங்கள், வழிமுறைகள் என்பன கடைப்பிடிக்கப்படுவதை நிச்சயிக்கவென, பல்வேறு தராதர அங்கீகாரத் திட்டங்களில் உள்ளகக் கணக்காய்வுகள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வின் போது தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகளில் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் ILAC, APLAC, IAF, PAC மற்றும் சார்க் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த, அரை வருட கூட்டங்கள், மகாநாடுகள் என்பனவற்றில் SLAB அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர். ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட தகைமையைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான ஒழுங்குகளின் அடிப்படையில் இந்த சர்வதேச ஸ்தாபனங்களின் கூட்டங்கள், கருத்தரங்குகள், வருடாந்த மகாநாடுகள் என்பனவற்றில் பங்குபற்றுவது அவசியமாக இருந்தது.

கொழும்பில் 2015 ஜுன் மாதம் 12 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை நடைபெற்ற SPLAC - PAC இணைந்த வருடாந்தக் கூட்டங்களை SLAB வெற்றிகரமாக நடத்தியிருந்தது. 180 க்கும் அதிகமான வெளிநாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினார்கள். தராதர அங்கீகாரம் சம்பந்தமான சார்க் நிபுணர்கள் குழுவினது கூட்டத்தையும் (SEGA) கொழும்பில் 2015 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை SLAB நடத்தியிருந்தது. ஒவ்வொரு சார்க் பொருளாதார அமைப்பிலிருந்தும் மூன்று அங்கத்தவர்கள் இந்தக் கூட்டங்களில் பங்குபற்றினார்கள்.

SLAB யின் 2015 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகள் மிகவும் குறைந்த ஆளணியினருடன் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக மற்றும் வெளிவாரி அடிப்படையிலான பல்வேறு நடவடிக்கைகளில் பணியாளர்கள் ஈடுபட வேண்டியிருந்ததனால், அவற்றின் பெறுபேறுகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. இருந்த போதிலும், SLAB பணியாளர்களின் தகைமை, கடின உழைப்பு, விசுவாசம் என்பன காரணமாக, பல திட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. புதிய வழிமுறையின் கீழ் திட்டமிடப்பட்ட இலக்குகளைக் கொண்ட நடவடிக்கைளில் 91% க்கும் அதிகமானவை இந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. ஆளணியினரின் எண்ணிக்கையையும் 18 இல் இருந்து 27 ஆக அதிகரிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் 09 புதிய நியமனங்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருட காலத்தில் SLAB யின் நடவடிக்கைகள் வெற்றியடைந்தமைக்கான முக்கிய காரணம், முகாமைத்துவம் உட்பட சகல பணியாளர்களினதும் அர்ப்பணித்த சேவையாகும். இந்தத் தருணத்தில் SLAB பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் தலைமைதாங்கும் சந்தர்ப்பம் கிடைத்த சபை அங்கத்தவர்களுக்கும் எனது விசேட நன்றி உரித்தாகுக. SLAB சம்பந்தமாக சகலரும் காண்பித்த அர்ப்பணிப்பும் ஈடுபாடும் பாராட்டுதலுக்கும் கௌரவிப்புக்கும் உரியவையாகும்.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த, கைத்தொழில், வர்த்தக அமைச்சர் கௌரவ றிஷாட் பதியுதீன், விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்ஷ்மி, கைத்தொழில் வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.மியனவல ஆகியோருக்கும் ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் SLAB யின் நடவடிக்கைகள் வெற்றி பெறவென பாரியளவிலான பங்களிப்பை வழங்கிய இரு அமைச்சுக்களினதும், பணியாளர்களுக்கும் விசேட பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நிறைவாக, SLAB மதிப்பீட்டாளர்கள், கொள்கை ஆலோசனைக்குழு மற்றும் தராதர அங்கீகார குழு, தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் என்பனவற்றின் அங்கத்தினர்கள், ஏனைய நிபுணர்கள் ஆகியோருக்கும் SLAB க்கு வழங்கப்பட்ட பெறுமதிமிக்க அர்ப்பணிப்புக்களுக்கும், அவர்களின் தொடர்ச்சியான ஆதரவுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2016 ஆம் ஆண்டில், SLAB யின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையையும், தராதர அங்கீகாரத் திட்டங்களையும் அதிகரிப்பதற்கு பேருதவியாக இருக்கும் என்பதனால், ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் பங்காளிகள் ஆகியோர் மீது SLAB கூடிய கவனத்தைச் செலுத்தவிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி, பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் உறுதிப்பாடு என்பனவற்றுக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அதிகரிப்பதில் ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் பங்காளிகள் ஆகியோர் மத்தியில் இந்த நடவடிக்கைகள் வெற்றிகரமான சூழலை ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம்.

நாமல் ராஜபக்ஷ
தலைவர்

## பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுச் சுருக்கம்

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் SLAB 10 வருடகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. ஆரம்பக் கட்டத்தில் SLAB யின் முன்னேற்றம் மந்தகதியில் இருந்த போதிலும், பின்னர் தொடர்ச்சியான வளர்ச்சியை அது பதிவு செய்தது. பரிசோதனை ஆய்வுடங்கள், வைத்திய ஆய்வுகூடங்கள், ஒத்தியல்பு மதிப்பீட்டு ஆய்வுகூடங்கள், வழிமுறைகள் உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஆளணியினர் சம்பந்தமான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், பரிசோதனை நிறுவனங்கள், பசுமை வாயு CHG மதிப்பீடு மற்றும் உறுதிப்பாட்டு அமைப்புக்கள் போன்ற சகல துறைகளின் நிறுவனங்களுக்கும் தராதர அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கையை SLAB தற்சமயம் ஆரம்பித்துள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, நிபுணத்துவப் பரிசோதனைத் திட்டங்கள் (PT) மற்றும் சிறந்த ஆய்வுகூட வழிமுறை (GLP) ஆகிய இரண்டு புதிய தராதர அங்கீகாரங்களை வழங்குவதற்கு SLAB தயாராகவுள்ளது.

SLAB யில், தராதர அங்கீகாரம் என்பது சுய கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இருந்த போதிலும், இலங்கை போன்ற ஒரு நாட்டில் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் உண்மையான வெற்றியையும், தாக்கத்தையும் பெற்றுக்கொள்ளவென, குறிப்பிட்ட சில துறைகளில் தராதர அங்கீகாரம் கட்டாயமாக்கப்படுவது அவசியமாகும். தரம் சம்பந்தமான சான்றிதழில் காணப்படும் பெறுபேறுகளின் உண்மை நிலையைத் தீர்மானிப்பதற்குத் தராதர அங்கீகாரத்தை ஒரு வழிமுறையாகக் கொள்வதன் அடிப்படையில் ஒழுங்கமைப்பாளர்களின் சட்டங்கள் மூலம் இந்த அணுகுமுறையை வெற்றிகரமாகச் செய்ய முடியும். உற்பத்திப் பொருட்கள் செயல்முறைகள் வழிமுறைகள் என்பனவற்றுக்கு குறிப்பிட்ட தரத்தையும் சிறந்த சந்தை வசதிகளையும் பெறும்நோக்கத்தில் கைத்தொழில் துறையினர் ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகளை ஆரம்பிப்பது அவசியமாகும். பொருட்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றை வழங்கும் வர்த்தகத்துறையில் சமமான நிபந்தனைகளின் அடிப்படையில் போட்டி இடம்பெறுவதை இது நிச்சயிக்கும்.

வழமையான செயல்முறைகளுக்கு உட்பட்ட வகையில், பொருட்களும், சேவைகளும் குறித்துரைக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், செயல்திறன் மிக்க நம்பகத்தன்மை வாய்ந்த, ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப சட்டங்களுடன் இணைந்திருப்பது அவசியமாகும். பொருட்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமான தரத்திற்கு மேலதிக கோரிக்கை இருக்குமானால், தொழில்நுட்பச் சட்டங்கள் அல்லது / மற்றும் தரங்கள் தொடர்பாக மேலதிக இணக்கப்பாடு அவசியமாகும். மேற்குறிப்பிட்ட நிலையில் ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் என்ற வகையில் அரச அதிகார பீடங்கள் தரம், சுகாதாரம், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, சந்தையில் நடுநிலைத் தன்மை என்பனவற்றை அங்கீகரிப்பது தொடர்பாக சட்டங்களை நடைமுறைக்கிட முடியும்.

ஒழுங்கமைப்பாளர்களின் தேவைகள் மந்த நிலையில் இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் நாட்டின் தேவையைக் கருத்திற் கொண்டு தற்போதைய வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவென SLAB கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த வருடத்தில் தராதர அங்கீகாரத்திற்கென 25 விண்ணப்பங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். தேவைக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பு ஆதரவு இருந்திருந்தால், மேலதிக வளர்ச்சியைப் பதிவு செய்திருக்க முடியும். இத்தகைய சூழ்நிலையில், தராதர அங்கீகாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்யும் அதேசமயத்தில், தேசிய தர உட்கட்டமைப்பைப் பலப்படுத்துவதில் மேலதிகக் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். முழு அளவிலான NQI யில் தற்போதைய வர்த்தக வழிமுறைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் காணப்பட்டால் மாத்திரமே நாட்டின் தராதர அங்கீகார வழிமுறைகள் முன்னேற்றமடையும்.

2015 ஆம் ஆண்டில் FSMS க்கான சர்வதேச அங்கீகாரத்தை SLAB பெற்றுக்கொண்டது. QMS, EMS க்கான IAF & PAC, MLA ஐயும், FSMS சான்றிதழுக்கான PAC, MLA ஐயும் தொடர்ந்து பேணி வந்துள்ளது. பரிசோதனை, வைத்தியப் பரிசோதனை, தரப்படுத்தல் என்பனவற்றிற்கான ILAC & APLAC MRA யும் தொடர்ந்து பேணப்பட்டுள்ளன. 2015 இல் பரிசோதனைக்கான APLAC MRA யின் பொருத்தமான தன்மை சம்பந்தமாக SLAB யை மதிப்பீட்டுக் குழுவினர் மதிப்பீடு செய்துள்ளனர். GHG பெறுமானம் மற்றும் நிரூபண அமைப்புகளுக்கான PAC MLA யில் இணைந்து கொள்வதற்கும் விண்ணப்பித்துள்ளது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தராதர அங்கீகார நிறுவனம் என்ற வகையில் SLAB எதிர்நோக்கும் முக்கிய சவால், தரமுயர்த்தப்பட்ட தராதர அங்கீகார வழிமுறைகளையும், சர்வதேச வகைகளுக்கு ஏற்ற வகையிலான செயல்முறைகளையும் தொடர்ந்து பேணுவதாகும். இந்த வகையில், சர்வதேச தராதர அங்கீகாரத் தேவைகளை மீளாய்வு செய்தல், விளங்கிக் கொள்ளுதல், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் தேசிய வழிகாட்டி நெறிகளைத் தரமுயர்த்தல் என்பன அவசியமாகும்.

ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளின் அளவும் எல்லையும் விரிவடைந்ததை அடுத்து, பணியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் திறன் அபிவிருத்தி என்பது பாரிய சவாலாக வந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் பௌதிக கட்டமைப்பு மட்டுப்படுத்தப்பட்டு நிதி வசதிகள் குறைக்கப்பட்ட போதிலும், தகைமை வாய்ந்த நம்பகத்தன்மை கொண்ட பணியாளர்களின் சேவைகளை SLAB தொடர்ந்தும் வழங்கி வந்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான பரிசோதனைகளின் தராதர அங்கீகாரத் திட்டம் SLAB யின் முக்கிய நடவடிக்கையாக தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இரசாயன உற்பத்திப் பொருட்கள், கிருமிநாசினிகள், சட்ட மருத்துவப் பரிசோதனைகள், உணவு மற்றும் விவசாயம், புடவை மற்றும் மின்சார உற்பத்திப் பொருட்கள், மண் வளம், உரம் உட்பட பல்வேறு துறைகளில் தராதர அங்கீகாரம் வழங்கப்படுவது அவசியமாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள ஆய்வுகூடங்களின் பரிசோதனை நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் இடம்பெறுவதற்கென

தேவையான அளவியல் மற்றும் தர உறுதிப்பாட்டு உதவியையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் வைத்திய ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரமும் முக்கியமாகக் கருதப்பட்டது. நாட்டில் வைத்திய ஆய்வுகூட சேவைகளை அபிவிருத்தி செய்வதில் சுகாதார அமைச்சுடன் இணைந்து SLAB பணியாற்றியுள்ளது. நோயாளிகள் பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் என்பனவற்றுக்கு சுகாதார அமைச்சே ஒழுங்கமைப்பு அதிகார அமைப்பாக உள்ளதனால், வைத்திய ஆய்வுகூட தராதர அங்கீகாரத் திட்டத்தில் அமைச்சு வழங்கிய ஆதரவு முக்கியமானதாகும். அரச வைத்தியசாலைகளிலுள்ள ஆய்வுகூடங்களைத் தரமுயர்த்துவதில் சுகாதார அமைச்சு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. வைத்திய ஆய்வுகூடங்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டில் பணிபுரியும் பணிப்பாளர்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் SLAB மேற்கொண்ட மற்றுமொரு முக்கிய திட்டமாகும்.

ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட மட்டில் சான்றிதழ் வழங்கும் வழிமுறை முக்கிய அம்சமாகும். தயாரிப்பு, உற்பத்தி, விநியோகம், சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் பெறுகை என்பனவற்றின் சகல கட்டங்களிலும், உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் சம்பந்தமாக ஒழுங்கான அடிப்படையில் மூன்றாம் தரப்பினரின் உறுதிமொழி இங்கே கோரப்படுகின்றது. உள்நாட்டு தராதர அங்கீகாரம் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், பொருட்களைப் பெறுபவர்கள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தராதர சான்றிதழ்களையே பெரிதும் விரும்பினார்கள். மற்றுமொரு முக்கிய அம்சம், உள்ளூர் உற்பத்தியாளர்களும், வெளிநாட்டுத் தராதர அங்கீகார அமைப்புக்களினால் வழங்கப்படும் வெளிநாட்டுத் தராதர அங்கீகார சான்றிதழ்களையே பெரிதும் விரும்புவதாகும். பெருமளவு பணச் செலவு ஏற்பட்ட போதிலும், உள்நாட்டு சான்றிதழ்களிலும் பார்க்க, வெளிநாட்டுச் சான்றிதழ்களையே வர்த்தகத்துறையினர் விரும்பினார்கள். பிரபல்யம் பெற்ற வெளிநாட்டுத் தராதர அங்கீகார அமைப்புக்களுடன் சம அந்தஸ்தைப் பெற்று, சர்வதேச அங்கீகாரத்தையும் SLAB அடைந்துள்ள போதிலும், தேசிய ரீதியிலான தராதர அங்கீகாரத்தில் தங்கியிருப்பது பெருமளவு பணச் செலவுடன் கூடியதாகும்.

உற்பத்திப் பொருட்கள் சான்றிதழ் வழங்கல் என்பது, பல்வேறு உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றின் கீழ் விஸ்தரிக்கப்படக் கூடிய மற்றுமொரு துறையாகும். தேயிலைக்கு மேலதிகமாக SLS சான்றிதழ் அடையாளத்தை கறுவா, ஆரோக்கிய சுற்றுலா ஆயுர்வேத மருந்துப் பொருட்கள், விவசாய உற்பத்திப் பொருட்கள், சேதனப் பொருட்கள் என்பனவற்றிற்கும் வழங்க முடியும்.

பரிசோதனை அமைப்புக்களுக்கான தராதர அங்கீகார நடவடிக்கைகள், பரிசோதனைக்கென அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், தொடர்ந்தும் மந்த கதியிலேயே இடம்பெற்றன. ஒழுங்கமைப்பு அதிகார அமைப்புக்களின் குறைந்த அளவிலான ஈடுபாடே இத்தகைய மந்தகதிக்கான காரணமாகும். இருந்த போதிலும், தராதர அங்கீகாரத்தின் மூலம் தொழில்நுட்பச் சட்டங்களை சிறந்த முறையில்

நடைமுறைக்கிடுவதற்கான சக்திவளம், பொதுப் பாதுகாப்பு, பாவனையாளர்களுக்கான ஆதரவு என்பனவற்றை நிச்சயிப்பதற்கான முக்கிய வழிமுறை என்ற வகையில் இதற்கு முதலிடம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த வகையில் ஒழுங்கமைப்பு அதிகார அமைப்புக்களுடன் SLAB நெருங்கிப் பணியாற்றியிருந்தது. வாகனப் புகை பரிசோதனை. NDT, பொழுதுபோக்கு பயணங்கள் என்பனவற்றிற்கான தராதர அங்கீகார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டன.

காலநிலை கட்டுப்பாடு பற்றிய நடவடிக்கையில் ISO 14065 உடன் இணைந்த வகையில் பசுமை வாயு மதிப்பீடு மற்றும் உறுதிப்படுத்தல் அமைப்புக்கள் என்பனவற்றுக்கான புதிய தராதர அங்கீகாரத் திட்டத்தை SLAB வழங்கியுள்ளது. இதன் மூலம் சக்திவளம் பெருமளவு சேமிக்கப்படுவது மாத்திரமல்லாமல், காலநிலை மாற்றம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகளும் வழங்கப்படும். உலக நாடுகள் பலவற்றிலுள்ள தராதர அங்கீகார அமைப்புக்கள் பசுமை வாயு மதிப்பீடு மற்றும் உறுதிப்படுத்தல் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம் வழங்கலை, சம்பந்தப்பட்ட நாடுகளின் தேசியத் திட்டங்கள், இலக்குகள் என்பனவற்றின் அடிப்படையில் வழங்குகின்றன. காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஆராந்ததையடுத்து, MLA அந்தஸ்துக்கான PAC விண்ணப்பத்தை SLAB சமர்ப்பித்துள்ளது.

ISO 50001 இன் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட புதிய முகாமைத்துவ வழிமுறையின் கீழ் சக்திவள முகாமைத்துவ செயற்திட்டம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. ISO 50001 அணுகுமுறை தேசிய ரீதியிலான எரிபொருள் பாவனையை குறிப்பிடத்தக்க வகையில் குறைப்பதனால், தொழிற்சாலைகள் சக்திவளத்தைச் சேமிப்பதற்கும் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கும் பெரிதும் உதவும். இந்தத் திட்டத்தின் கீழ் SLAB ஒரு விண்ணப்பத்தைப் பெற்றுள்ளது.

தரம் மற்றும் தராதர அங்கீகாரம் சம்பந்தமான விடயங்களில் பயிற்சித் திட்டங்களையும், செயலமர்வுகளையும் SLAB அதிக எண்ணிக்கையில் நடத்தியுள்ளது. SLAB மதிப்பீட்டாளர்கள், ஆய்வுகூட பணியாளர்கள் ஏனைய சம்பந்தப்பட்ட குழுவினர் ஆகியோர் முக்கியமாக இதில் பங்குபற்றினார்கள். ஒத்தியல்பு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான அடித்தளத்தை உருவாக்க தொழிற்திறன் அபிவிருத்தி முக்கியமானதாகும். இவற்றுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட குழுக்களுக்கான தராதர அங்கீகார அபிவிருத்தி திட்ட நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டன.

APLAC - PAC யின் கூட்டு வருடாந்த மகாநாட்டை கொழும்பில் 2015 ஜுன் மாத்தில் SLAB வெற்றிகரமாக நடத்தியிருந்தது. ஆசிய பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளின் தராதர அங்கீகார அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 150 பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினார்கள். அதேவேளை, சார்க் தராதர அங்கீகார நிபுணர்கள் குழு மகாநாட்டையும் கொழும்பில் 2015 நவம்பர் மாத்தில் SLAB நடத்தியுள்ளது. சார்க்கின் ஒவ்வொரு பொருளாதாரத் திட்டத்தில் இருந்தும் தலா மூன்று அங்கத்தவர்கள் இந்தக் கூட்டங்களில்

பங்குபற்றினார்கள். SEGA யின் அடுத்த செயற்படு வருடத்திற்கான தலைமைத்துவமும் SLAB க்கு வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் SLAB யின் தராதர அங்கீகார சேவைகளின் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்ட அதேசமயத்தில், அதன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் நூற்றுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை SLAB பதிவு செய்திருந்த அதேசமயத்தில், இவர்களில் ஐந்து நிறுவனங்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவையாகும். SLAB யின் மூலவள அடித்தளம் எண்ணிக்கையிலும், தொழில்நுட்பத் துறைகளிலும், சேவை வழங்குதலிலும் அதிகரித்து வந்துள்ளது.

SLAB 2015 ஆம் ஆண்டில் சாதனை என்று குறிப்பிடக்கூடிய 28.5 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது. SLAB யின் நிதித்துறை அடித்தளம் தொடர்ந்து பலப்பட்டு வரும் அதேசமயத்தில், திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியுதவி குறைக்கப்பட்டது. நிதித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை 2020 ஆம் ஆண்டளவில் பெற்றுக்கொள்வது SLAB யின் இலக்காகும்.

SLAB யின் கூட்டிணைப்புத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு இலக்கு, தொலைநோக்கு, முக்கிய பெறுபேறுகள் ஆகிய துறைகள் SLAB யின் தற்போதைய தேவைகள் மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் அடிப்படையில் மீளமைக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டளவில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு அவர்களுடன் ஒழுங்கான அடிப்படையில் தொடர்புகள் என்பனவற்றை SLAB இலக்காகக் கொண்டுள்ளது. பக்கச்சார்பற்ற தன்மை, நடவடிக்கைகளின் நிரந்தரம் என்பனவற்றை நிச்சயிக்கவென பணியாளர் தகைமை மற்றும் நிதித்துறை நிலைப்பாடு என்பன சம்பந்தமான நிறுவன தகைமைகள் அதிகரிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட இலக்குகளை பெறுவதில், ஆளுநர் சபையின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள், SLAB பணியாளர்கள், மதிப்பீட்டாளர்கள், குழு அங்கத்தவர்கள், ஏனைய பங்குதாரர்கள் வழங்கிய ஆதரவும், உதவியும், பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவையாகும். இவர்களது உதவியும் ஆதரவும் இல்லாவிட்டால், தேசிய ரீதியிலும் சர்வதேச அடிப்படையிலும் பாராட்டப்படும் இத்தகைய முன்னேற்றத்தை SLAB பெற்றிருக்க முடியாது. சகலரினதும் தொடர்ச்சியான ஆதரவுக்கும் SLAB யின் நம்பகத்தன்மை அதிகரிக்கப்படுவதற்கு அவர்கள் வழங்கிய நம்பிக்கைக்கும் உதவிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நான் எனது மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திலக் விக்கிரமசிங்க
பணிப்பாளர் / பி.நி.அ

## ஆளுனர் சபை

சபையின் அதிகாரங்களும், நடவடிக்கைகளும் ஆளுனர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டின் SLAB சட்டத்தின் 32 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 13 அங்கத்தவர்கள் இந்த ஆளுனர் சபையில் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாதமும் இந்தச் சபை கூடுவது வழக்கமாகும்.

2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஆளுனர் சபையில் கீழ்க்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. நாமல் ராஜபக்ஷ | தலைவர் - விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி |
| 2. | திரு. பீ.எம்.தர்மதிலக | பதில் பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி - விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு |
| 3. | டொக்டர் எல்.என்.செனவீர | பணிப்பாளர் நாயகம் - இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிலையம் |
| 4. | திரு. என்.எம்.பீ.பீ.கௌஷல்ய கே நவரத்ன | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி |
| 5. | திருமதி ரீ.எம்.ஏ.டபிள்யூ. தென்னக்கோன் | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி |
| 6. | திரு. ரீ.எம்.பீ. மெனிக் | மேலதிகச் செயலாளர் - கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு. உள்ளக வர்த்தக அமைச்சின் பிரதிநிதி |
| 7. | திரு. அசித்த கே செனவிரத்ன | மேலதிகச் செயலாளர் - கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி |
| 8. | திரு. கே.பி.குமார | பணிப்பாளர் – அளவைப் பகுதி, தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் |
| 9. | திரு. எம்.ஏ.எஸ்.எச்.பெரேரா | பொது நிதியத்தின் பணிப்பாளர், பொதுத் திறைசேரியின் பிரதிநிதி |
| 10. | திரு. எம்.கே.ஜீ.எஸ்.பீ.கே. ஜயசேகர | பணிப்பாளர் (திட்டமிடல்), விவசாய அமைச்சின் பிரதிநிதி |
| | திரு. ரீ.விக்கிரமசிங்க | செயலாளர், பணிப்பாளர் / பிநிதி அதிகாரி SLAB |

சுகாதார அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை வர்த்தக சம்மேளனங்கள் சமாஜம் என்பனவற்றிலிருந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்படவில்லை.

## SLAB - ஸ்தாபக அமைப்பு




*** பதவி வெற்றிடமாகவுள்ளது.**

## செயற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கை தராதர அங்கீகார சபையின் முகாமைத்துவ நடவடிக்கைகள் அனைத்தும் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஸ்தாபக அமைப்பில் தெரிவிக்கப்பட்டவாறு சபையின் சகல நிறைவேற்று நடவடிக்கைகளுக்கும் தொழில்நுட்ப, நிதி, நிருவாக ஊழியர்களின் அனுசரணையுடன் பணிப்பாளர் / பி.நி.அ பொறுப்பாக உள்ளார்.

## குழுக்கள்

ஆளுநர் சபைக்கும், முகாமைத்துவத்திற்கும் வழிகாட்டி, ஆலோசனை வழங்கவும், இலங்கை தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகள், கடமைகளை நிறைவேற்றவுமென, சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்ற கீழ்க்காணும் தொழில்நுட்பக் குழுக்களை ஆளுநர் சபை நியமித்துள்ளது.

**கொள்கை ஆலோசனைக் குழு**

கொள்கை ஆலோசனைக் குழு, இலங்கை தராதர அங்கீகார சபையின் பலதரப்பட்ட துறைகளினதும் அபிவிருத்தி மற்றும் தராதரத் திட்டங்களின் செயற்பாடு என்பன சம்பந்தமான கொள்கை விடயங்களில் ஆளுநர் சபைக்கு ஆலோசனை வழங்குகிறது.

**தரார அங்கீகாரக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதிலும், ஒத்தியல்பு மதிப்பீடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அங்கீகரிப்பதிலும் கீழ்க்காணும் தராதர அங்கீகாரக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

1. பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
2. மருத்துவ ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
3. சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
4. பரிசோதனை அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு

**தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட கடமைகளினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களில் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பை கீழ்க்காணும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் கொண்டுள்ளன:

1. இரசாயனப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
2. உயிரியல் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
3. இயந்திரவியல் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
4. வைத்தியப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
5. சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
6. உணவுப் பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் சோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
7. வாகனங்களின் புகை வெளியேற்றப் பரிசோதனை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
8. சூழல் முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
9. பசுமை இல்ல வாயு (GHG) சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு

**நிபுணத்துவக் குழுக்கள்**

இவற்றுக்கு மேலதிகமாக, உயிர்வேதியியல் (Biochemistry), குருதியியல் (Heamatotogy), நுண்ணுயிரியல், திசுத்துயரியல் (Histopathology), மருத்துவம் சம்பந்தமான பொருட்கள், NDT பரிசோதனை மற்றும் ஆய்வு, தடய அறிவியல் பரிசோதனை, வன சான்றிதழ் மற்றும் ஆற்றல் மேலாண்மைச் சான்றிதழ் ஆகிய துறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களுக்கு உதவவென, நிபுணத்துவக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு என்பனவற்றின் அமைப்பு விபரங்கள் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

## மனித வளம்

SLAB யின் மனித வள அமைப்பில் சிறியளவிலான உள்ளக ஊழியர் குழுவும், கல்வி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பட்ட தொழில்திறன் நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பாளர்களைக் கொண்ட பாரியளவிலான அமைப்பும் அடங்கும்.

நிறுவனங்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டின் தரத்தை உறுதி செய்வதே SLAB யின் கடமையாகும். ஆரம்ப காலத்தில் இருந்தே SLAB ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக, சபையின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அதேசமயத்தில், ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, ஏனைய வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களுக்கு சமமாக SLAB யும் அதன் தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. சாதாரணமாக, புதிதாக சேர்ந்து கொண்ட அதிகாரி ஒருவர், சம்பந்தப்பட்ட துறையில் தகைமை பெறுவதற்கு குறைந்தது மூன்று வருடங்கள் தேவைப்படும்.

## SLAB ஊழியர்கள்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையில் கடமையாற்றிய ஊழியர்களின் விபரம் பின்வருமாறு:

| பதவி | அங்கீகாரம் | நியமனம் | (வெற்றிடம்) |
|---|---|---|---|
| பணிப்பாளர் / பி.நி.அ | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 | -- | (01) |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) | 01 | 01 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 11 | 08 | (03) |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | -- | (01) |
| கனிஷ்ட முகாமையாளர் (நிதி மற்றும் நிர்வாகம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் IT) | 03 | - | (03) |
| முகாமைத்துவம் / கணக்கியல் உதவியாளர் | 04 | 04 | - |
| சாரதிகள் | 03 | 02 | (01) |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 02 | - |
| மொத்தம் | 27 | 18 | (09) |

## மதிப்பீட்டாளர் குழு

பலதரப்பட்ட துறைகளின் நடவடிக்கையில் தராதர அங்கீகாரத் திட்டச் செயற்பாட்டில் SLAB சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துமும், பயிற்சியும் பெற்ற மதிப்பீட்டாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. SLAB ஊழியர்களுடன் கடமைகளைப் பொறுப்பேற்கவென, 232 பயிற்சிபெற்ற வெளிவாரி மதிப்பீட்டாளரைக் கொண்ட குழுவொன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான கடமையைப் பொறுப்பேற்க முன்னர், அதற்கான தகைமைகளைப் பெறவென குறிப்பிட்ட துறையில் பயிற்சி பெற்று நிபுணத்துவமும் அடைந்திருப்பது அவசியமாகும். தராதர அங்கீகாரச் சேவையின் தேவைகளின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் SLAB மதிப்பீட்டாளர் குழுவை விஸ்தரிக்கவென இரண்டு மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

2015 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் SLAB மதிப்பீட்டாளர் குழுவின் விபரங்கள் வருமாறு:

| தராதர அங்கீகாரத் துறைகள் | தலைமை மதிப்பீட் டாளர் | அணித் தலைவர்கள் | தொழில்நுட்ப மதிப்பீட் டாளர் | மதிப்பீட் டாளர் | பயிற்சி மதிப்பீட் டாளர் |
|---|---|---|---|---|---|
| பரிசோதனை | 04 | 02 | - | 03 | - |
| இரசாயனப் பரிசோதனை | - | 02 | 15 | - | 33 |
| இயந்திரவியல் பரிசோதனை | - | 01 | 08 | - | 03 |
| உயிரியல் பரிசோதனை | - | - | 06 | - | 11 |
| இயந்திரவியல் சான்று வழங்கல் | - | - | 05 | - | 04 |
| மின்னியல் சான்று வழங்கல் | - | - | 05 | - | 01 |
| பாய்மப்பொருள் சான்று வழங்கல் | - | - | 02 | - | 01 |
| கதிரியக்கவியல் சான்று வழங்கல் | - | - | 01 | - | - |
| வெப்ப ஒளி சான்று வழங்கல் | - | - | 01 | - | - |
| மருத்துவப் பரிசோதனை | 03 | - | 23 | 01 | 43 |
| சான்று வழங்கல் வழிமுறைகள் ISO 9001(QMS) | 04 | - | 07 | 02 | 14 |
| சான்று வழங்கல் வழிமுறைகள் ISO 14001(EMS) | 04 | - | 05 | 02 | 14 |
| சான்று வழங்கல் வழிமுறைகள் ISO 22000 (FMS) | 04 | - | 04 | 02 | 08 |
| சான்று வழங்கல் வழிமுறைகள் OHSAS 18001 | 04 | - | 04 | 07 | 09 |
| சான்று வழங்கல் - பொருட்கள் | 03 | - | 05 | 02 | 08 |
| சான்று வழங்கல் - நபர்கள் | 03 | - | - | - | 07 |
| கண்காணிப்பு | 04 | - | 04 | - | 29 |
| GHG பரிசோதனை | 01 | - | 01 | 01 | 26 |
| GLP | - | - | - | - | 23 |
| மொத்தம் | **34** | **05** | **96** | **20** | **234** |

## நடவடிக்கைகள்

**ISO/IEC 17011 க்கு உட்பட்ட SLAB தராதர அங்கீகார நடவடிக்கைகளின் முகாமைத்துவமும் செயற்பாடும்**

SLAB யின் முக்கிய நடவடிக்கை ISO/IEC 17011: 2004 க்கும், சர்வதேசக் கொள்கைகளுக்கும் அமைவான வழிமுறைகள், வழிகாட்டி நெறிகள் என்பனவற்றின் அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டங்களை நடைமுறைக் கிடுவதாகும். SLAB யினால் நடத்தப்படும் முக்கிய தராதர அங்கீகாரத் திட்டங்களின் விபரங்கள் வருமாறு:

1. ISO/IEC 17025 யின் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
2. ISO/IEC 17025 யின் அடிப்டையிலான ஆய்வுகூட தரப்படுத்தலுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
3. ISO 15189 அடிப்படையிலான மருத்துவ ஆய்கூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
4. ISO/IEC 17021 இன் அடிப்படையிலான வழிமுறைகளுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
5. ISO/IEC 17065 இன் அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்.
6. ISO/IEC 17024 அடிப்படையிலான நபர்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுக்கான தராதர அங்கீகார திட்டம்
7. ISO/IEC 17020 அடிப்படையிலான பரிசோதனை அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டம்

2015 ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவ வழிமுறைகளை மேற்கொள்ளவும், மேம்படுத்தவும் SLAB நடவடிக்கை மேற்கொண்டது. ISO 15189 மற்றும் தரப்படுத்தல் உட்பட்ட பரிசோதனையில் APLAC / ILAC MRA யை தொடர்ந்து வைத்திருப்பதில் SLAB வெற்றி கண்டது. QMS, EMS, FSMS என்பனவற்றுக்கான PAC/IAF MLA மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் என்பன சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டில் SLAB அனுமதிக்கப்பட்டது. APLAC MRA பரிசோதனைக்கென SLAB மதிப்பீடு செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், GHg க்கும் நிரூபண அமைப்புக்களுக்குமான மதிப்பிடலுக்கென PAC MLA யிடம் 2015 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

**பரிசோதனை ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 அடிப்படையிலான பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட தராதர அங்கீகாரம் SLAB யினால் வழங்கப்படும் தராதர அங்கீகார சேவைகளில் பெரும்பாலான இடத்தை வகிக்கிறது. தேவையற்ற தொழில்நுட்பத் தடைகளை விலக்கவும், நம்பகமான பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் துறையினருக்கு உதவி வழங்கவுமென, பரிசோதனை ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரத்தில் 2015 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.

இந்த வருடத்தில் ஒன்பது (09) புதிய தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதை அடுத்து, மொத்தமாக நாற்பத்து ஐந்து (45) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதினாறு (16) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தராதர அங்கீகாரத் திட்டத்தின் அடிப்படையில் இருபத்து ஐந்து (25) கண்காணிப்பு மதிப்பீடுகளும், எட்டு (08) மீள் மதிப்பீடுகளும் திட்டமிட்டபடி இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. உணவு மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள், மண், சீமெந்து மற்றும் கொங்றீட், புடவை வகைகள், உரம், கால்நடைப் பரிசோதனை போன்ற துறைகளில் தராதர அங்கீகாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

**தரப்படுத்தல் ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவாக இருந்த போதிலும், பரிசோதனை மேற்கொள்ளும் ஆய்வுகூடங்கள் நம்பகமான பெறுபேறுகளை வழங்குவதற்கும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைகள், தரங்கள் என்பனவற்றைப் பரப்புவதற்குமென பலமான வளிமண்டல உட்கட்டமைப்பு தேவைப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அதிக எண்ணிக்கையான தரப்படுத்தல் ஆய்வுகூடங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தராதர அங்கீகாரம் பெற்ற ஓத்தியல்பு மதிப்பீட்டு ஆய்வு கூடங்களின் எண்ணிக்கை நான்கு (4) ஆகும். ஒரு (1) புதிய விண்ணப்பமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. புதுப்பித்தலுக்கென ஒரு (1) விண்ணப்பமும், கண்காணிப்பு மதிப்பீட்டிற்கென மூன்று (3) விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தரப்படுத்தல் ஆய்வில் பொருட்களின் திண்மம், வெப்பதட்ப நிலை, நீளம், காலப் பிரமாணம், தொகை, அழுத்தம் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

**மருத்துவ ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

மருத்துவ ஆய்வுகூடங்களின் ISO 15189 அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டம், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள், தரங்களுக்கு உட்பட்ட வகையில், சகல மதிப்பீட்டு வழிமுறைகளுக்கும் உட்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. ஆய்வுகூடங்களில் தரமான முகாமைத்துவ வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு, அரச மருத்துவ ஆய்வு கூடங்களினால் 2015 ஆம் ஆண்டிலும் எத்தகைய அக்கறையும் காண்பிக்கப்படவில்லை.

உடல் திசு இரசாயனம், இரத்த வாந்தி, நுண் உயிரியல், நுண் திசு நோய்க் கூறுஇயல் என்பன சம்பந்தமான நான்கு நிபுணர் குழுக்களும் திட்டமிடப்பட்ட மருத்துவ ஆலோசனை விடயங்களும் மருத்துவ ஆய்வுகூட தராதர அங்கீகாரத்திற்குப் பிரமாணங்களாக இருந்தன.

ISO 15189 அடிப்படையில் பதின் மூன்று (13) மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒரு (01) புதிய விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டு (02) தராதர அங்கீகாரங்களும், மூன்று (03) மீள் புதுப்பித்தல்களும் இடம்பெற்றன. ஒரு (01) முன் மதிப்பீடு, எட்டு (08) கண்காணிப்பு மதிப்பீடுகள், எட்டு (08) மீள் மதிப்பீடுகள் என்பனவும் இடம்பெற்றன.

**சான்றிதழ் அமைப்புகளுக்கான தராதர அங்கீகாரம்**

தராதர அங்கீகார சான்றிதழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் நேரடியாக அனுசரனை வழங்குவதனால், சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம் என்பது SLAB மிகுந்த அக்கறை செலுத்தும் மற்றுமொரு துறையாகும். ஆய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வழிமுறைகள், சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC 17021 மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC வழிகாட்டி 17065,

ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கல் ISO/IEC 17024 என்பனவற்றின் அடிப்படையில் தராதர அங்கீகாரத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

வழிமுறைகள் சான்றிதழ் வழங்கும் அமைப்பு சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு (01) புதிய விண்ணப்பம் சம்பந்தமாகவும், இரண்டு (02) மீள் மதிப்பீடு தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. QMS, EMS, FSMS மற்றும் OHSAS சான்றிதழ் வழங்கல் என்பனவே முக்கியத்துவம் பெற்றன.

உற்பத்திப் பொருள் சான்றிதழ் சம்பந்தப்பட்ட மட்டில் ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கல் துறையில் ஒரு (01) கண்காணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஒரு (01) புதிய தராதர அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

**பரிசோதனை அமைப்புக்களின் தராதர அங்கீகாரம்**

பல்வேறு அதிகார அமைப்புக்களுக்கும், சோதனை நடவடிக்கைகளையும், ஒத்தியல்பு மதிப்பீட்டுச் சேவைகளையும் தராதர அங்கீகாரம் பெற்ற சோதனை அமைப்புக்கள் வழங்கும்படி சட்டங்களை நடைமுறைக்கிடுவதில் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த வகையில் ஒரு (01) விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு (02) முன் மதிப்பீடுகளும், ஒரு (01) பூர்வாங்க மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டன.

**GHG மதிப்பீடு மற்றும் சரிபார்த்தல் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம்**

GHG உறுதிப்படுத்தலுக்கென தராதர அங்கீகாரம் பெற்ற சோதனை அமைப்புக்கள் சரிபார்த்தல் சேவைகளை வழங்கும்படி எதிர்பார்க்கப்பட்டுள்ளன. இரண்டு (02) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு (02) முன் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும், நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும், வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன், நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (03) ஆம் மற்றும் (04) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக்

கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வு ஆண்டின் போது ரூபா 3,491,000 தொகையான கிடைக்க வேண்டிய வியாபார வருமானங்களுக்கு உரிய ரூபா 463,092 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச் சட்டம் | |
| (i) 4(ஈ) பிரிவு | சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேவையான பணம் முன்னரே தீர்மானிக்கப்பட்டு சேமிக்கப்பட்ட பணம் முதலீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5(1) ஆம் பிரிவு | அமைச்சரால் 13 அங்கத்தவர்களை உள்ளடக்கிய நிர்வாக சபையொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் போது 08 அங்கத்தவர்கள் மாத்திரம் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (iii) 5(2) ஆம் பிரிவு | யாராவது அங்கத்தவர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் நிர்வாக சபைக்கூட்டங்களுக்குச் சமூகமளிக்காது |

| | | |
|---|---|---|
| | | விடின், அமைச்சரால் பதில் கடமைக்காக வேறொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வு ஆண்டில் நடத்தப்பட்ட 06 கூட்டத் தடவைகளில் ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் சமூகமளித்த அங்கத்தவர் ஒருவருக்காக வேறொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.2 ஆம் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டம், பாதீட்டுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒபபிடக்கூடிய முறையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 9.14.2 ஆம் பிரிவு | மனித வள முகாமைத்துவம் தொடர்பாக அலுவலகக் கைந்நூல் ஒன்று முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் 2013 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது இருந்தமையால் மனித வள முகாமைத்துவம் தொடர்பான அலுவலகக் கைந்நூல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2013 சனவரி 15 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொது முயற்சிகளில் முகாமைத்துவத் தரங்களுக்கு உரிய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான பதிலாள் ஒருவரை நியமிப்பதற்குத் திட்டமிடுவது நிர்வாக சபையின் பொறுப் பொன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையின் பணிப்பாளரின் ஓய்வு பெறும் வயது 2015 யூன் 03 ஆந் திகதியளவில் பூர்த்தியடைந்த போதிலும், பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கான திட்டம் தயாரிக்கப் படாமையின் காரணமாக அறிக்கைத் திகதி வரையிலும் அப்பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. |

## 03. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவு ரூபா 4,293,560 மிகையொன்றாக இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,901,337 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வு ஆண்டின் நிதி விளைவுகளில் ரூபா 607,777 ஆன வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வு ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 19,715,719 இனால் அதிகரித்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 20,907,970 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது, 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சபையின் மிகை கிரமமாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அது கருத்தில் கொள்ளத் தக்களவு அதிகரிப்புடன் காணப்பட்ட போதிலும், மீளாய்வு ஆண்டில் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகையில் குறைவொன்றைக் காண்பித்தது. ஊழியர் ஊதியம், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் ரூபா 6,178,733 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டு வரையில் ரூபா 4,929,845 வரை கிரமமாகக் குறைவடைந்திருந்த போதிலும், மீண்டும் 2014 ஆம் ஆண்டின் போது 126 சதவீத அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், மீளாய்வு ஆண்டின் போது அது ரூபா 10,012,380 ஆனமையால் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.44 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபையின் பணிகள் பின்வருமாறு இருந்தன.

- உரிய சர்வதேச நியமத்தின் அடிப்படையில், தேசிய நியமங்களுக்கு இணங்க பரிசோதனைக் கூடங்களுக்கும், உறுதிப்படுத்துகின்ற மற்றும் பரிசோதனை நிறுவனங்களுக்கும், பயிற்சியளித்தல் நிறுவனங்களுக்கும் மற்றும் ஒத்தியல்பு

மதிப்பீட்டைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஏனைய தரப்பினர்களுக்கும் தராதரங்களை வழங்குதல்.

- தீர்மானிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்க, தராதர நடவடிக்கைகளை முன்னேற்றுதல், தராதரத்தின் போது சர்வதேச ஒத்துழைப்பிற்காக வசதிகளை வழங்குதல்.
- தராதரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும், மதிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் செயலமர்வுகளை நடத்துதல் மற்றும் அது தொடர்பான தகவல்களை விளம்பரம் செய்தல்.
- வெளிநாட்டு மற்றும் சர்வதேச சபைகளுடன் தராதரத்திற்குரிய விடயங்கள் தொடர்பாக பரஸ்பர ஏற்றுக்கொள்ளல் அடிப்படையில் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வு ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையினைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்க்ள கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) புதிய தராதரங்களை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2005 ஆம் ஆண்டு முதல் தராதரத்திற்கு உட்படுத்த வேண்டிய பரிசோதனைக் கூடங்களிலும், வைத்திய ஆய்வு கூடங்களிலும் முறையே 184 மற்றும் 311 கூடங்கள் இனங் காணப்பட்டிருந்த போதிலும், 2005 முதல் 2015 வரை 62 பரிசோதனைக் கூடங்களும், 20 வைத்திய ஆய்வு கூடங்களும் மாத்திரம் தராதரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. தராதரத்திற்கு உட்படுத்தப்பட்ட 06 பரிசோதனைக் கூடங்களிலும், 05 வைத்திய ஆய்வு கூடங்களிலும் வருடாந்த தராதரத்தைப் பெற்றுக் கொள்வதிலிருந்து விலகியிருந்தனர்.

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பரிசோதனை செய்யும் 01 நிறுவனத்திற்கு மாத்திரமே தராதரம் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனமும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் தராதர செயற்பாடுகளில் இருந்து விலகியிருந்தது.

(iii) 2009 ஆம் ஆண்டின் போது சான்றிதழ் விநியோகிக்கும் நிறுவனங்களில் தராதரம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரையில் சான்றிதழ் விநியோகிக்கும் 06 நிறுவனங்கள் மாத்திரம் தராதரப்படுத்தலை மேற்கொண்டிருந்தன. அதில் ஒரு நிறுவனம் மீளாய்வு ஆண்டில் தராதரப்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து விலகியிருந்தது. மீளாய்வு ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சான்றிதழ் விநியோகிக்கும் நிறுவனத்தின் கீழ் ‘‘முறைமைகள் மற்றும் பச்சையில்ல வாயு வழங்குகின்ற’’ 04 நிறுவனங்களுக்காக தராதரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தராதரச்

சான்றிதழ் விநியோகம் தொடர்பாக பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவ்வாறான தராதரச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(iv) ஒவ்வொரு வருடமும் விசேட அறிவினை முன்னேற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் (Proficiency Testing Programme) கீழ் புதிய நிறுவனம் ஒன்றை இனங்கண்டு, அந் நிறுவனத்தை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படல் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டதில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் புதிய நிறுவனங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வு ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம், பரிசோதனைக் கூடம் மற்றும் அளவை நிறுவனங்களின் தராதரப்படுத்தல் தவிர ஏனைய துறைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு செயல் முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிராதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்குக் காரணங்களாக, தராதரப்படுத்தும் செயற்பாடுகள் முழுமையாக சுயாதீனமான அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டிருந்தமையும் தராதரப்படுத்தலைக் கட்டாயப்படுத்தல் தொடர்பாக சபைக்கு சட்ட ரீதியான இயலுமை காணப்படாதிருந்தமை கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன.

**(ஆ) பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் (Create Public Awareness)**

பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தையும், செயலாற்றல் அறிக்கைகளையும் ஒப்பீடு செய்த போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வு ஆண்டின் போது பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தும் 21 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 16 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தன. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது அது 50 சதவீத குறைவினைச் சுட்டிக் காட்டுகின்றது.

(ii) தராதரப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்களை விழிப்புணர்வூட்டும் 05 பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் 02 சேவைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியதாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம், மீளாய்வு ஆண்டின் போது சேவைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமோ அல்லது பத்திரிகை அறிவித்தலோ பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தராதர சேவைகளை வழங்குதல் (Providing Accreditation Service)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தராதர செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும், 11 தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களில் 04 குழுக்களுக்குரிய கூட்டம் மீளாய்வு ஆண்டின் போது நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விசேட இயலுமைகளை வழங்குவதற்காக 02 வெளி நிறுவனங்கள் சபையில் பதிவு செய்திருந்த போதிலும், அதில் ஒரு நிறுவனம் மாத்திரமே 03 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியிருந்தது.

(iii) தராதர சான்றிதழ்களைப் பெற்று தராதர சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் 03 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் தராதரப்படுத்தல் புதுப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் போது 33 நிறுவனங்களுக்காக மீண்டும் தராதரப்படுத்தலைப் புதுப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 12 நிறுவனங்கள் தராதரத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) இயலுமை மேம்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வு ஆண்டின் போது மதிப்பீட்டாளர்களைப் பயிற்றுவிக்கும் 04 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டில் நடத்தப்பட்ட 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒப்பாக மீளாய்வு ஆண்டின் போது 01 நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடத்தப்பட்டமையின் காரணமாக, மதிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வு ஆண்டின் போது நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 182,771 செலவினமொன்று சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகக் கிடைத்த வருமானம் ரூபா 80,000 மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் போது 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 1,162,528 செலவிடப்பட்டு பெறப்பட்ட வருமானம் 2,702,334 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இவ்வருடத்தின் வருமானம் 97 சதவீதத்தினால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவச் செயற்திறன் இன்மைகள்**

சபையின் உத்தியோகத்தர்கள் கற்கை / பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெளிநாடு செல்லும் போது, அந்த வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனத்தினால் தேவையான வசதிகள் வழங்கப்பட்டிருந்தும், சபையினாலும் உத்தியோகத்தருக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 52,085 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பிப்பதை செயற்திறனானதாக ஆக்குவதற்காக சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இணைய கணனி முறைமையின் சேவைக் கட்டணமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 2,014,183 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த மென்பொருளின் குறைபாடுகளைச் சரி செய்வதற்காக பணிப் பொறுப்பு கையளித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 09 மாதங்களுக்காக ரூபா 270,000 படியொன்றும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒன்று மாத்திரம் ஆனமையினால், உரிய சகல செலவினங்களும் சிக்கனமற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது.

**4.4 பதவி அணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் மேலதிகப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பத்திரிகை அறிவித்தலைப் பிரசுரிப்பதற்காக ரூபா 196,661 செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்காக மீளாய்வு ஆண்டின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு கணக்காய்வுத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133(1) (அ) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று

ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவு செயல்முறைகள்

மீளாய்வு ஆண்டின் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 13,905 தொகையான 02 எழுதும் மேசைகள், ரூபா 98,946 பெறுமதியான 01 மடிக் கணனி, ரூபா 112,500 பெறுமதியான 05 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் ரூபா 17,450 பெறுமதியான 05 டொங்கிள்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், கொள்வனவுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரை ஆக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்ப்பட்டது.

### 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள், அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கொள்வனவு நடைமுறைகள் | சபைக்கு ஆண்டின் போது தேவையான கொள்வனவுகளின் சரியான தன்மையைத் தீர்மானிக்க முடியாமையினால் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் | சபை தயாரித்திருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතීතන මණ්ඩලය
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை
Sri Lanka Accreditation Board for Conformity Assessment

අංක 546/4, ගාලු පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව.
இல 546/4, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
No. 546/4, Galle Road, Colombo 03, Sri Lanka.


2016 ஒக்டோபர் 20
FN-FL-16(2016-06)

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்,
306/72 பொல்துவ வீதி,
பத்தரமுல்ல

**ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை பற்றி 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(c) அறிக்கையின் மேலான சபையின் தலைவரது கருத்துக்கள்.**

**2.2 நிதி அறிக்கைகள் மீதான மீளாய்வுகள்**

**2.2.1 கணக்கியல் பற்றாக்குறைகள்**

VAT மற்றும் NBT என்பன, ‘‘பெறுகைக்குரிய வருமானம்’’ என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டு, காண்பிக்கப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

**2.3 சட்டங்கள், பிரமானங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றுடன் இணங்காமை**

(அ) ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டம்

i. பிரிவு 4(d) பிரிவு

திறைசேரியில் இருந்து நிதி ஒதுக்கீடுகளைப் பெறும் போது, எத்தகைய மேலதிகத் தொகையையும் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால், வெளிநாட்டு நாணயமாற்று வருமானங்கள் காசுப் பாய்ச்சல் தேவைகளின் அடிப்படையில் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படும் வரை வெளிநாட்டு நாணயமாற்று சம்பாத்தியக் கணக்கில் வைக்கப்படும். இதற்கான வட்டி பெற்றுக்கொள்ளப்பட இருக்கிறது. வெளிநாட்டு நாணயமாற்று நிலுவையில் இருந்து

12,500 டொலர்கள் தற்காலிகமாக மாதாந்த புதுப்பித்தல் அடிப்படையில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ii. பிரிவு 5(1) பந்தி
சம்பந்தப்பட்ட நியமனத்தைப் பூர்த்தி செய்யும்படி அமைச்சுக்கு அறியத் தரப்பட்டுள்ளது.

iii. பிரிவு 5(2) பந்தி
கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய அரச நிறுவனங்கள் சுற்று நிருபம் இல. PED/12

i. பிரிவு 4.2.2
தற்போதுள்ள வழிமுறைகளைக் கவனத்திற் கொண்டு எதிர்காலத்திலும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்று கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

ii. பிரிவு 9.14.2
அலுவலகக் கைந்நூலை அங்கீகரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் / செயற்பாடுகள் என்பன, பொது நிறுவனங்கள், திறைசேரித் திணைக்களங்கள் என்பனவற்றுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால், திறைசேரியின் ஏனைய திணைக்களங்களின் பதில்கள் காலதாமதமாகியதனால் இறுதி அங்கீகார வேலைகள் இன்னமும் முடியவில்லை.

(இ) 2003 ஜனவரி 15 ஆம் திகதிய அரச நிறுவனங்கள் சுற்று நிருபம் இல. 01/2013
ஒத்தியல்பு மதிப்பீட்டு விடயங்களில் அனுபவம் வாய்ந்த பொருத்தமான அதிகாரியைத் தெரிவு செய்வது கஷ்டமான விடயமாக இருந்ததனால், தற்போதைய பணிப்பாளரின் சேவைகளை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கென அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக இந்த நடவடிக்கை வெற்றியளிக்காததனால், பணிப்பாளரை ஆட்சேர்ப்பதற்கென மீள விளம்பரம் செய்யவும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**03. நிதித்துறை மீளாய்வு**

3.1 நிதித்துறைப் பெறுபேறுகள்

(அ) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

**04. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 நடவடிக்கைகள்**

(அ) புதிய ஒத்தியல்பு மதிப்பீடுகளை வழங்கல்

(i) ஒத்தியல்பு மதிப்பீடுகள் சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே நடைமுறைக்கிடப்படுகின்றன. ஒத்தியல்பு மதிப்பீடுகளைக் கட்டாயமாக்குவதற்கான சட்டங்களோ அல்லது பிரமாணங்களோ இல்லாத படியால், இந்த நடவடிக்கை பின்னடைவு கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, ஐரோப்பிய சமூகம் மீன் ஏற்றுமதியைத் தற்காலிகமாகத் தடை செய்ததனால், ஏற்கனவே ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெற்றிருந்த ஆய்வு கூடம் ஒன்று சுய அடிப்படையில் நடவடிக்கைகளை இடைநிறுத்திக் கொண்டுள்ளது.

(ii) ஆய்வு கூடங்கள், நிறுவனங்கள் என்பனவற்றிற்கான ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் இருந்த போதிலும், இதனைக் கட்டாயமாக்குவதற்கான சட்டங்களோ பிரமாணங்களோ இல்லை. ஆனால், மதிப்பீடுகளைச் செய்யும் நிறுவனங்கள் ஒத்தியல்பைச் செய்வதில்லை. ஆனால், வெளிநாட்டு அம்சம் சம்பந்தமாக, குறிப்பிட்ட பரிசோதனை நிறுவனங்கள், குறிப்பிட்ட நாட்டின் சட்டபூர்வ அமைப்பினது அடிப்படையிலான மீள் ஒத்தியல்பு மதிப்பீட்டை மேற்கொள்வதில்லை.

(iii) இலங்கையில் ஏறத்தாள 15 சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் இருந்த போதிலும், அவை வெளிநாட்டு சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களின் உப நிலையங்களாகவே செயற்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, உள்ளூர் நிறுவனங்களும், பாதிக்கப்படுகின்றன. தற்சமயம், வெளிநாட்டு ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து மூன்று நிறுவனங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. உள்ளகப் பிரச்சினைகள் காரணமாக, மற்றொரு நிறுவனம் வெளிநாட்டு ஒத்தியல்பு நடவடிக்கைகளை தாமதமாக மேற்கொள்கிறது. பசுமை வாயு சான்றிதழ் வழங்கும் இரண்டு நிறுவனங்களுக்கு இந்த வருடம் தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இடம்பெற இருக்கும் PAC மகாநாட்டின் சம அடிப்படையிலான மதிப்பீட்டின் காரணமாக, இந்தச் சான்றிதழ் வழங்கல் தாமமாகியுள்ளது.

(iv)

1. சமூகம் / தோற்றம் / தொழில்நுட்ப அறிவு படைத்த நிறுவனங்கள் என்பன நாட்டில் இல்லை / சமூகமளிக்கவில்லை.

2. இந்தத் திட்டம், ஏனைய நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது / அவை, நிதி உதவியையோ / சலுகைகளையோ விரும்பவில்லை.

3. அதேவேளை, இந்தத் திட்டங்கள், ஏனைய அமைப்புக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன. அவற்றிற்கு நிதியுதவியோ / சலுகைகளோ / (MUSSD / Holcim) தேவைப்படவில்லை.

(ஆ) பொது மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டங்கள்

i. சபையின் ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல் அதேவேளை, தற்போதுள்ள சேவையாளர்களின் சேவைகளைச் சீர்குலைக்காமல் பொறுப்புணர்ச்சியுள்ள பல பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சென்ற வருடம் நடைபெற்ற APLAC - PAC மகாநாடுகளுக்கு குறிப்பிடத்தக்க நேரம் அனுமதிக்கப்பட்டமையே இத்தகைய பின்னடைவுக்கான காரணமாகும்.

ii. சென்ற வருடம் நடைபெற்ற APLAC - PAC மகாநாட்டுடன் இணைந்ததாக பொது மக்கள் விழிப்புணர்ச்சி பத்திரிகையாளர் மகாநாடும், பத்திரிகை விளம்பரங்களும் வெளியிடுவது என்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஒத்தியல்பு மதிப்பீட்டுச் சேவைகளை வழங்குதல்

i. தேவையின் அடிப்படையிலேயே தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றின் எண்ணிக்கையும் அவ்வாறே தீர்மானிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஆண்டுக் காலத்தின் போது செயற்பாட்டுக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

ii. மதிப்பீட்டுடன் இணைந்த வகையில், விலைப்பட்டியை ITI சமர்ப்பிக்காத படியால், சென்ற வருடம் இந்த அமைப்புக்களுக்கு நிதி உதவிகளோ / சலுகைகளோ வழங்கப்படவில்லை. ITI யில் போதிய எண்ணிக்கையான சேவையாளர்கள் இல்லாத படியால், நிபுணத்துவ அறிவு மேம்பாட்டுத் திட்டங்களை அவர்கள் நடைமுறைக்கிடவில்லை.

iii. 2015 ஆம் ஆண்டிலும், ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகள் தாமதமாகிய அல்லது பின்தள்ளி வைக்கப்பட்ட நிறுவனங்கள் மீள் மதிப்பீட்டிற்கென விண்ணப்பித்திருந்தன. இதற்கான காரணம், 2016 ஆண்டு இறுதியளவில் ஒத்தியல்பின் பெறுமானம் முடிந்து விடும் என்பதாகும். இதன் காரணமாக, இத்தகைய சகல நிறுவனங்களினதும் ஒத்தியல்பு 2016 முதலாம் தவணையில் வழங்கப்பட்டது. ஒத்தியல்பில் இருந்து விலக்களிக்கப்பட்ட சில நிறுவனங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்பட்டது.

(ஈ) சக்தி வள அபிவிருத்தி

i. நான்கு மதிப்பீட்டாளர்கள் பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்ட முறைக்கிடப்பட்ட போதிலும், மதிப்பீட்டாளர் ஒதுக்கீட்டுக் குழுவில் உள்ள மதிப்பீட்டாளர்கள் பயிற்சியளிப்பதற்குப் போதியதாக இல்லாதபடியாலும்,

ஏனைய விசேட பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட படியாலும் இவற்றை மேற்கொள்ள முடியவில்லை.

ii. இந்தப் பயிற்சித் திட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்டவர்களும், தற்போதுள்ள பயிற்சியாளர்களும் பங்குபற்றியுள்ளனர். இதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஒரு சில பயிற்சி பெற்ற மதிப்பீட்டாளர்கள் தற்சமயம் SLAB யில் கடமையாற்றி வருகின்றனர். SLAB யிலுள்ள உள்ளக மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதனால் இந்தச் செலவினத்தை SLAB பொறுப்பேற்றுக் கொண்டது.

**4.2 முகாமைத்துவப் பற்றாக்குறைகள்**

வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் / கூட்டங்கள் என்பனவற்றில் பங்குபற்றும் போது காலை உணவு, இராப்போசனம் என்பனவற்றில் சமூகமளிக்கத் தவறுமிடத்து அல்லது நாடு விட்டு நாடு செல்லும் பிரயாண காலப்பகுதிக்கான கூட்டிணை அலவன்ஸில் 35% ஐ சாப்பாட்டுச் செலவுக்கு உபயோகிக்கலாம் எனத் தெரிவிக்கும் சுற்று நிருபத்தின்படி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஒவ்வொரு இராப்போசன அல்லது இரவு உணவுக்கு 15% சதவீத தொகையையும் எஞ்சிய 5% ஐ காலை உணவுக்கும் வழங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**4.3 பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள்**

தற்போதைய மென்பொருட்களைத் திருத்தியமைப்பதற்கும், திருத்தவேலைகளின் பின்னர் அவற்றைச் சரிவரத் தரமுயர்த்தி உபயோகிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் என இந்தச் சேவையாளர் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பாக ICTA யுடன் ஆராயப்பட்டுள்ளது. இந்தத் தகவல்கள் விரிவாக கவனத்திற் கொள்ளப்பட இருக்கின்றன. இந்த விடயம் தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**4.4 சேவையாளர் நிர்வாகம்**

(அ) மேலதிகப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கவென ஒத்தியல்பு மதிப்பீட்டு அனுபவத்துடன் சேவையாளர் ஒருவரை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை.

(ஆ) SLAB க்கு IT சேவையாளர் ஒருவரை நிரந்தரமாக ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளைத் தாமதிப்பது / பின்தள்ளி வைப்பது என பணிப்பாளர் சபையினர் தீர்மானித்துள்ளனர். இந்த வழிமுறை இல்லாவிட்டால் இத்தகைய நிரந்தர நியமனத்திற்கு போதிய கடமைகள் இருக்க மாட்டா என்பதே இதற்கான காரணமாகும்.

## 05. கணக்கியலும் சிறந்த ஆளுமையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

தற்காலிகமாக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டதை அடுத்து, உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.2 பொருள் கொள்வனவு நடவடிக்கைகள்

உயர்வு அட்டவணை அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்வது என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், தற்போதுள்ள பொருட்களில் சில பாவனைக்கான நிலையில் இல்லாத படியால், முன்னேற்பாட்டின் அடிப்படையிலான காசுப் பாய்ச்சலின் கீழ் பொருட்களை வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

## 06. வழிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) புதிய நியமனங்கள் பின்தள்ளி வைக்கப்பட்டதனால், இவற்றுக்கெனக் கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருட்களின் கொள்வனவும் பின்தள்ளி வைக்கப்பட வேண்டியதாயிற்று.

(ஆ) ஒத்தியல்பு மதிப்பீடு கட்டளை அடிப்படையிலானது அல்ல என்பதும், நாட்டில் ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்புப் பற்றாக்குறையாக உள்ளதும் இந்த நிலைமைக்குக் காரணமாகியுள்ளன. இது, எதிர்காலத்திற்கென கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

**நாமல் ராஜபக்ஷ**
தலைவர்
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான
இலங்கை தராதர அங்கீகார சபை

## SLAB நிறுவன இலச்சினை

## SLAB தராதர அங்கீகார அடையாளம்

## தராதர அங்கீகாரக் குழு

**இணைப்பு 1**

**சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| 1. டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம் மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 2. திரு. சேன பீரிஸ் | முன்னாள் பணிப்பாளர், தேசிய சுத்திகரிப்பு உற்பத்தி மையம் |
| 3. திரு. பீ.எஸ்.பீ.மென்டிஸ் | முன்னாள் பணிப்பாளர் / SLAB |
| 4. பேராசிரியர் நிலந்தி பண்டார | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 5. பேராசிரியர் எஸ்.எம்.ஏ. நாணயக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர். மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 6. கலாநிதி டப்ளியூ.எம்.பலிப்பான | பிரதி ஆணையாளர், தொழில் திணைக்களம் |
| 7. திரு. டப்ளியூ.மீவத்தன | முன்னாள் பணிப்பாளர் நாயகம், SLSI |
| 8. திரு. என்.கே.ஏ.ரூபசிங்க | பிரதிப் பணிப்பாளர், தொழில்நுட்பம், ஏற்றுமதி விவசாய திணைக்களம் |
| 9. திரு. வஜிர பெரேரா | பணிப்பாளர், (NVQ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் |
| 10. திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை (குழுக்களின் தலைவர்) |
| 11. திருமதி சந்திதா எதிரிவீர | பிரதிப் பணிப்பாளர், SLAB (செயலாளர்) |

**பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அளவை மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| 1. டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| 2. திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| 3. பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 4. பேராசிரியர் எச்.டி.குணவர்தன | இரசாயன விஞ்ஞானத்தில் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. திரு. எச்.எல்.ஆர்.டபிள்யூ. மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் |
| 6. கலாநிதி திருமதி இந்திகா அபேகுணவர்தன | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| 7. பேராசிரியர் கொடிக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| 8. திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை (செயலாளர்) |
| 9. திரு. திலக் விக்கிரமசிங்க | தலைவர், பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை (குழுக்களின் தலைவர்) |

**மருத்துவ பரிசோதனை ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| 1. கலாநிதி சுஜாதா மனன்வத்த | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய STD/AIDS நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் |
| 2. பேராசிரியர் (செல்வி) ஜெனிபர் பெரேரா | பேராசிரியர் நுண் உயிரியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. டொக்டர் (திருமதி) மாலா எம் ஜயதிலக | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய புற்று நோய் வைத்தியசாலை |
| 4. கலாநிதி (திருமதி) எம் என் துடாவை | சரும நோயியல் ஆலோசகர், டேடர்ன்ஸ் வைத்தியசாலை |
| 5. டொக்டர் (திருமதி) கே சீ கே வாசலஆரச்சி | இரசாயன நோயியில் ஆலோசகர், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை |
| 6. டொக்டர் (திருமதி) எம் எம் குணதிலக்க | இரசாயன நோயியில் ஆலோசகர், தேசிய வைத்தியசாலை, கொழும்பு |
| 7. டொக்டர் (செல்வி) சரோஜா சிறிவர்தன | இளைப்பாறிய இரசாயன நோயியல் ஆலோசகர், தேசிய வைத்தியசாலை, கொழும்பு |
| 8. திரு. ரீ. விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**மேற்பார்வை நிறுவனங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| 1. கலாநிதி ஏ ஜீ ரீ சுகதபால | பணிப்பாளர், இலங்கை செயற்படு ஆற்றல் அதிகார சபை |
| 2. பேராசிரியர் எஸ் எம் ஏ நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| 3. டொக்டர் எல் டீ ஜே எப் நாணயக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் தொழில்நுட்ப திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| 4. திரு. ரீ எஸ் அமரவங்ச | முன்னாள் உதவிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| 5. டொக்டர் ஐ ஏ எஸ் பிரேமகுமார | பணிப்பாளர் நாயகம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |
| 6. திரு. ரீ விக்கிரமசிங்க | தலைவர், பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |
| 7. திரு. எல் எச் டீ பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை (செயலாளர்) |

**கொள்கை ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| 1. திரு. திதுல் கோதாகொட | முன்னாள் தலைவர், ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை (தலைவர்) |
| 2. திருமதி துவன் அஸ்ரின் | உடனடி கடந்தகாலத் தலைவர், EASL இலங்கை வர்த்தக சம்மேளனப் பிரதிநிதி |
| 3. திரு. தினேஷ் டி சில்வா | இறக்குமதிப் பிரிவுத் தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம் |
| 4. திரு. சுஜீவ் சமரவீர | பிரதித் தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம் |
| 5. திரு. அபேரத்ன முத்துகல | செயலாளர் நாயகம், இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம் |
| 6. திருமதி சீ திலகரத்ன | நுகர்வோர் விவகாரப் பணிப்பாளர், நுகர்வோர் விவகார அதிகார சபை, |
| 7. இலங்கை பொறியியல் நிறுவனப் பிரதிநிதி | |
| 8. திரு. ஆர் எம் எஸ் கே ரத்நாயக்க | பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| 9. திரு. சுமித் பொன்னப்பெரும | முகாமைத்துவப் பணிப்பாளர், கொன்ரோல் யூனியன் இன்ஸ்பெக்சன் தனியார் நிறுவனம், இலங்கை உணவு பதனிடல் நிறுவகப் பிரதிநிதி |
| 10. திருமதி சுபாரா ஜயசிங்க | மன்றப் பிரதிநிதி மற்றும் உடனடித் தலைரும், இலங்கை ஆய்வுட சங்கம் |
| 11. தொழில் திணைக்களத்தின் பிரதிநிதி | |
| 12. டொக்டர் ஆனந்த குணசேகர | DDG (MS) II, உடல் நல மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு |
| 13. டொக்டர் சுமித் ஆனந்த | பணிப்பாளர் / மருத்துவ ஆராய்ச்சி நிலையம் |
| 14. திருமதி சந்திமா எதிரிவீர | பிரதிப் பணிப்பாளர். SLAB (செயலாளர்) |

**இரசாயனப் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| திரு. ஈ ஜீ சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| கலாநிதி ஏ எம் முபாறக் | முன்னாள் பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| திரு. ஆர்.எம்.ஜீ.பீ.ராஜநாயக்க | நகர பகுப்பாய்வாளர், கொழும்பு மாநகர சபை |
| பேராசிரியர் ஆர்.டீ.விஜேசேகர | இரசாயனவியல் பற்றிய பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், பேராதனை பல்கலைக்கழகம் |
| கலாநிதி எல்.எம்.கே.திலகரத்ன | இரசாயன பரிசோதனைகள் பற்றிய ஆலோசகர் |
| டொக்டர் எஸ்.எஸ்.ஸ்கந்தராஜா | இரசாயனவியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| செல்வி எச்.குமாரதுங்க (செயலாளர்) | பிரதிப் பணிப்பாளர், SLAB |

**உயிரியல் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (திருமதி) சந்திரானி விஜேரத்ன (தலைவர்) | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் சீ.பீ.கொடிக்கார | நுண்ணுயிரியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.ஐ.அபேகுணவர்தன | நுண் உயிரியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) சீ.எம்.நாணயக்கார | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி காவன் குரே | நுண்ணுயிரியலாளர், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் |
| திரு. ரீ.விக்கிரமசிங்க (செயலாளர்) | பிரதிப் பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**இயந்திரப் பரிசோதனை, அளவீடுகள் மற்றும் அளவை திருத்தல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| திருமதி பீ.டீ.சீ.ஜனஷாந்தி | இலத்திரனியல் பொறியியலாளர், நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளாக் நிலையம் |
| திருமதி என்.டீ.ஜீ.விஜேசிறிவர்தன | பிரிவுத் தலைவர், மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு, NERD சென்றல் ஸ்ரீலங்கா |
| திரு. எஸ்.என்.நைல்ஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| திரு.எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம், MUSSD |
| திரு.எச்.பீ.என்.ஜே.குணசேகர | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நட்ப சேவைகள்), ITI |
| செல்வி எச்.குமாரதுங்க (செயலாளர்) | பிரதிப் பணிப்பாளர், SLAB |

**உயிரியல் ஆய்வுகூடப் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (திருமதி) சந்திராணி விஜேரத்ன | சிரேஷ்ட விரிவுரையாளர் தாவரவியல், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழம் |
| கலாநிதி (திருமதி) சீ.எம்.நாணயக்கார | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.ஐ.அபேகுணவர்தன | நுண் உயிரியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி எச்.ஜீ.ஜீ.சூரியாராச்சி | பணிப்பாளர், உற்பத்திச் சான்றிதழ், SLSI |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**எந்திரமுறைப் பரிசோதனை, அளவை மற்றும் அளவீடுகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதிகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழம் |
| டொக்டர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | இயந்திரப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் (MUSSD) |
| திரு.எச்.பீ.என்.ஜே.குணசேகர | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப சேவைகள்), ITI |
| திரு. எஸ்.என்.நைல்ஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திருமதி என்.டீ.ஜீ.விஜேசிறிவர்தன | பிரிவுத் தலைவர், மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு, NERD சென்றல் ஸ்ரீலங்கா |
| திருமதி சீ. ஜனஷாந்தி | மின்னியல் பொறியியலாளர், மாதிரி தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளார்க் நிலையம் |
| செல்வி எச்.குமாரதுங்க | பிரதிப் பணிப்பாளர், SLAB |

**மருத்துவ / சிகிச்சை பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் லால் ஜீ சந்திரசேன | உறுப்பினர், தனியார் சுகாதார சேவைகள் ஒன்றிணைப்பு மன்றம் |
| டொக்டர் (செல்வி) காந்தி ஆரியரத்ன | செயலாளர், தனியார் சுகாதார சேவைகள் ஒன்றிணைப்பு மன்றம் |
| டொக்டர் (செல்வி) சிரியானி நாணயக்கார | நுண் திசு நோய் ஆலோசகர், இலங்கை நோய்க் குறி ஆய்வு கல்லூரி |
| டொக்டர் (செல்வி) ஜயந்தி பீ எல்விட்டிகல | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |
| டொக்டர் ரொஷன் ஜயசூரிய | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |
| டொக்டர் (செல்வி) நிஷாத்யா ரணசிங்க | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |
| டொக்டர் (செல்வி) ஆர்.சீ.மீகம | இரசாயன நுண் திசு நோய் ஆலோசகர், இலங்கை நோய்க் குறி ஆய்வு கல்லூரி |
| திரு.எஸ்.சோமசிரி | முன்னாள் சிரேஷ்ட தர உறுதிப்பாட்டு முகாமையாளர். ITI |
| டொக்டர் (செல்வி) எம்.கே.பி.வீரசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி ரீ.எம்.ஜீ.பத்திராஜ | விஞ்ஞான ஆராய்ச்சியாளர், NERD நிலையம் |
| டொக்டர் நில்வள கொட்டேகொட | விஞ்ஞான ஆராய்ச்சியாளர், SLINTEC |
| டொக்டர் மலிந்திர ஜுவான் படதுரகே | ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர், டிப்ட் புரடக்ட் நிறுவனம் |
| திரு. எம்.டி.சி.பெரேரா | பிரதிப் பணிப்பாளர், NBRO |

**உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| டொக்டர் (திருமதி) பீ.தல்கஸ்வத்த | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், SLSI |
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்க பகுப்பாய்வாளர் |
| டொக்டர் ரீ.பீ.ஆனந்த ஜயலால் | பணிப்பாளர், (சுற்றாடல் மற்றும் தொழில்சார்) சுகாதாரப் பிரிவு, சுகாதார அமைச்சு |
| திரு. விதாகே ஷஹன் தேஜக | ஆரோக்கிய முகாமையாளர், கொழும்பு ஹில்டன் |
| செல்வி சஜீவிக பெரேரா | முதன்மை ஆராய்ச்சி விஞ்ஞானி, ITI |
| செல்வி ஒஸ்ரின் | உணவு பதனிடுவோர் சங்கம் |
| செல்வி எப். வீரவர்தன | முகாமையாளர், Ind-Expo சான்றிதழ் நிறுவனம் |

**வாகன வெளிவீச்சு பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் ஆர்.ஏ.அத்தலகே | தலைவர், இயந்திரப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. ஏ.டபிள்யூ.திசாநாயக்க | பணிப்பாளர், WET நிகழ்ச்சித் திட்டம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் |
| திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா | உதவிப் பணிப்பாளர், MUSSD |
| திரு.ஜே.ஏ.கே.பீ.விஜேகுணசேகர | இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம், ITI |
| திரு. ஆர்.எம்.குலசேன | பிரதிப் பணிப்பாளர், வாயு கண்காணிப்பு பகுதி, மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| டொக்டர் டீ.எஸ்.ஜயவீர | பணிப்பாளர் நாயகம், பொது நிதி திணைக்களம், நிதி அமைச்சு |
| திரு. ஆர்.வீ.கே.கரவிட்ட | தகுதி நிலை பொறியியலாளர், பொறியியல் தரப் பிரிவு, SLSI |
| திரு. ஆர்.எம்.ஆர்.டீ.வீரசூரிய | சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரி, வாயு வள முகாமைத்துவ அதிகாரி |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பிநிஅ இலங்கை தராதர அங்கீகார சபை |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை |

## SLAB யின் ஸ்தாபக அமைப்புச் செயற்பாடுகள்



## தராதர ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2015

**தராதர அங்கீகார பரிசோதனை ஆய்வுகூடங்கள்**

| ஆய்வுகூடத்தின் பெயர் | பரிசோதனைத் துறை |
|---|---|
| Lanka Calibration Services (Pvt) Ltd | அளவீடு (மின்சாரம், நிறை, வெப்ப நிலை) |
| Electruments International (Pvt) Ltd | அளவீடு (நிறை, நீளம் மற்றும் வெப்ப நிலை) |
| Process Point Textile Lanka (Pvt) Ltd | இரசாயன மற்றும் இயந்திரப் பரிசோதனை (ஆடை) |
| இரசாயன ஆய்வு கூடம் | இரசாயனப் பரிசோதனை (மீன்களின் திசுநீர் தேக்கி) |
| National Aquatic Resources & Research Development Agency ( NARA) | |
| Bureau Veritas Consumer Products Services Lanka (Pvt) Ltd | இரசாயனப் பரிசோதனை (உணவு மற்றும் விவாய உற்பத்தி, நீர், ஆடை, பூச்சி கொல்லிகள்) |
| Laboratory Services | இரசாயனப் பரிசோதனை (உரம்) |
| A Baur & Co (Pvt) Ltd<br>Censura Laboratory Services | இரசாயனப் பரிசோதனை (நீர்) |
| MAS Fabric Park<br>R & D Testing Laboratory | இயந்திரப் பரிசோதனை (கையுறை) |
| Ansell Lanka (Pvt) Ltd<br>தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடம் | இயந்திரப் பரிசோதனை (கையுறை) |
| Ansell Lanka (Pvt) Ltd<br>Concrete & R & D Laboratory | இயந்திரப் பரிசோதனை (கொங்கிறீற் மற்றும் திரள்) |
| Tokyo Cement Company ( Lanka) (Pvt) Ltd<br>நுண்ணுயிர் ஆய்வுகூடம் | உயிரியல் பரிசோதனை (தெங்கு உற்பத்திகள்) |
| தெங்கு அபிவிருத்தி அதிகார சபை | |

**மதிப்பீடுகளின் எண்ணிக்கை**

| அங்கீகாரத் துறை | முன்னணி மதிப்பீட்டாளர்கள் / அணித் தலைவர்கள் / மதிப்பீட்டாளர்கள் | தொழில்நுட்ப மதிப்பீட்டாளர்கள் / தொழில்நுட்ப நிபுணர்கள் | பயிற்சி மதிப்பீட்டாளர்கள் |
|---|---|---|---|
| பரிசோதனை அமைப்புகள் | 04 | 04 | 29 |

**அங்கீகாரம் பெற்ற மருத்துவப் பரிசோதனை ஆய்வு கூடங்கள்**

| **ஆய்வுகூடத்தின் பெயர்** | **பரிசோதனைத் துறை** |
|---|---|
| Healthwatch Medical Diagnostic Centre (Pvt) ltd | மருத்துவ உயிர்வேதியியல், இரத்தவியல் மற்றும் குருதி நிண நீரியல் |
| தேசிய சிறுநீரக நிலையம் | மருத்துவ உயிர்வேதியியல் |